# யாழ். குடா வரலாறு காணாத விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)

மண்மீட்பு யுத்தத்தில் தமது உயிர்களை அர்ப்பணித்த விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி நேற்றிலிருந்து மாவீரர் வார கொண்டாட்டங்கள் ஆரம்பமாயின. குடாநாட்டில் காணும்இடம்எங்கும் புலிக்கொடி பறந்தவண்ணம் உள்ளது. தோரணங்களும் பந்தல்களும் நகரங்களையும் கிராமங்களையும் இணைத்து நிற்கின்றன. அவை தவிர அரச அலுவலகங்கள் தனியார் தொழில்மையங்கள் என அனைத்து இடங்களிலும் புலிக்கொடியும் தோரணமும் வீதியை மேவிநிற்கும் நினைவுச் சிகரங்களும் அலங்கரிக்கின்றன.

விமானப் படையினரின் அச்சுறுத்தல்களையும் மீறி இந்தநிகழ்ச்சிகளில் (4ஆம்பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 பிரமோதூத வருஷ கார்த்திகை மீ 06 உ வியாழக்கிழமை (22 - 11 - 1990) ஓசை 268

# “மாவீரர் அதர்மத்திற்கெதிராய் தர்மத்திற்காகப் போராடினர்”

## மாவீரர் நாளை ஒட்டி விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் மகேந்திரராசா அறிக்கை



(யாழ்ப்பாணம்)

மாவீரர்கள் அதர்மத்தைக் கண்டு வெகுண்டெழுந்தவர்கள். தர்மத்திற்காகப் போராடியவர்கள். மானிட முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள பிற்போக்குச் சிந்தனைகள், பிற்போக்கு நடைமுறைகள் தாண்டிச் செல்பவர்கள் என விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவர் கோ மகேந்திரராசா விடுத்த மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

அன்பார்ந்த தமிழீழ மக்களே! இம்மண்ணின் விடுதலைக்காய் உயிர் கொடுத்த மாவீரர்களின் பெற்றோர்களே! அவர்களின் உடன் பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்.

எங்கள் தாய் மண்ணுக்காக மடிந்த வீரர்களை இன்று நாங்கள் நினைவு கூருகின் (3ஆம் பக்கம் பார்க்க)

## பல முனையில் முன்னேற முயன்ற இராணுவம் இழப்புடன் திரும்பியது

### சலாடின் சேதம்: 10 இராணுவம் பலி

(மாவிட்டபுரம்)

வலிகாமம் வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலையில் இருந்து இரவு வரை ஏற்பட்ட மோதலில் ஒரு சலாடின் ட்ரக் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது. பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

புலிகள் தரப்பில் நான்கு பெண் போராளிகள் உட்பட பத்துப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுக்காலை பலாலி - காங்கேசன் துறை மாவிட்டபுரம் பகுதியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து புன்னாலைக்கட்டுவன், தச்சன்காட்டுச் சந்தி, அச்சுவேலி, வளளாய் பகுதிகள் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. சிறிலங்கா விமானப்படையும் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டன.

இத் தாக்குதலின் போது மாவிட்டபுரம் முகாமில் இருந்து தச்சன்காட்டுச் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவ அணிக்கு துணையாக வந்த சலாடின் ட்ரக் புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலுக்கு இலக்காகி முற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 பெண் போராளிகள் உட்பட 10 போராளிகள் வீரமரணம்

(மாவிட்டபுரம்)

வசாவிளானில் இருந்தும், மாவிட்டபுரம் பகுதியிலிருந்தும் பலமுனைகளிலும் நேற்று வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன இடம்பெற்ற மோதல்களில் செழியன் (சிதம்பரப்பிள்ளை சண்முகராசா, யாழ்ப்பாணம்), நெல்சன் (வீரசிங்கம் இந்திரகுமார், கிளிநொச்சி), கணேஸ் (நாகசோதி ஜீவநேசம், புத்தூர்), லெப். தம்பி (கந்தசாமி தம்பி, மயிலிட்டி), லெப். நெவில் (நடராசா நாகேஸ்வரன், நீர்வேலி), சரவணன் ஆகியோரும், பெண் போராளிகளான நாமகள், லக்கி, பூங்குயில், சஜலக்ஷ்மி ஆகியோரும் வீரமரணமடைந்துள்ளனர்.

அதேவேளை நேற்று முன்தினம் தச்சன்காட்டுச்சந்திக்குச் சமீபமாக இடம்பெற்ற மோதலில் சோபன (கதிரன் சதீஸ்குமார், சரசாலை) என்பவர் வீரமரணமடைந்தார்.

கடந்த 17ஆம் திகதி ஆனையிறவில் இராணுவத்துடனான மோதலில் காயமுற்ற அறிஞன் என்பவர் நேற்று வீரமரணமடைந்தார்.

இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



மாவீரர் தின ஆரம்ப நாள் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியமும் (பேபி) போராளிகளும் கலந்துகொண்டிருப்பதை முதலாவது படத்திலும், துணைவேந்தர் துரைராசா பல்கலைக் கழகத்தில் கொடி ஏற்றுவதை இரண்டாவது படத்திலும், யாழ். செயலகத்தில் கொடி ஏற்றப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### ஒத்துழைக்கவும்

ஈழநாதத்தில் தொடராக வெளிவந்துகொண்டிருக்கும் மாவீரர் பட்டியல் முழுமையானதல்ல.

இதில் போராளிகள் வீரமரணமடைந்த திகதி, அவர்களின் சொந்தப் ((4ஆம் பக்கம் பார்க்க)

### தலைவர் கொடியேற்றினார்

(நமது நிருபர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் முகாம்களில் கொடியேற்று வைபவங்கள் நடைபெற்றன. தலைவர் பிரபாகரனும் அவர் தங்கியிருந்த முகாமொன்றில் கொடியேற்றினார். தலைமைச் செயலகத்தில் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியம் (பேபி) கொடியேற்றினார்.

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

பெரியகுளம் கண்டாவளை யைச் சேர்ந்த சிவஞானம் சிவகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை 600963 627 V கிளிநொச்சியில் கடந்த ஆறு மாதங்களின் முன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் சந்திரபவான், கிளிநொச்சி பஸ் நிலையம் என்ற விலாசத்தில் கொடுத்து சன்மானத்தை பெற்றுக் கொள்ளவும். சி. சிவகரன்.

(B/1617)

## நியூ வீனஸ்
## NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60, ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு. கிளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது.

(B/1586)

## மல்லாகத்தில் வீடு சேதம்

(மல்லாகம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் மல்லாகத்தில் சரவணபவானந்தன் என்பவரின் வீட்டின்மேல்விழுந்து வீடு சேதமடைந்தது. அவரின் மகன் சரோஜா என்பவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார். அ. வசந்தராசா, திருநாவுக்கரசு ஆகியோர் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (83)

# தமிழ் மக்களின் உரிமைக்காக உயிர் கொடுத்த உத்தமர்கள்

தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தையும் வென்றெடுக்க தம் உயிரையே கொடுத்த உத்தமர்கள் எம் உள்ளத்தில் குடிகொண்ட மாவீரர்களே. அவர்கள் மலரப் போகும் தமிழீழத்தின் அத்திவாரக் கற்கள். அவர்களின் தியாகங்கள் விலைமதிப்பற்றவை. மக்களால் மதிக்கப்படுபவை. அந்த மாவீரரின் பாதச் சுவடுகள் வழியே நாமும் சென்றால் எமது விடிவு மிக விரைவில் இட்டும். அது எம்மை சுதந்திரபுருஷர்களாக வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை முன்னிட்டு தீவக கோட்டத்தைச் சார்ந்த கூட்டுறவாளர் விடுத்த சிறப்பு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவக கோட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் இன்று பி.ப 4.00 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

## தற்காலிக செய்முறைக்காட்டுனர் மருத்துவபீடம்

மருத்துவபீடத்திலுள்ள Pre and Para Clinical துறைகளில் செய்முறைக் காட்டுனராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990-11-30-ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் விண்ணப்பதாரர்களை 1990-12-06 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சபை அறையில், நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்;

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-11-19. (B-1616)

## அம்புலன்ஸ் மீது ஹெலித் தாக்கு

(தெல்லிப்பளை)

நேற்று முன்தினம் ஒன்பதுமணியளவில் இணுவில் பகுதியில் வைத்து அம்புலன்ஸ் வண்டியைத் துரத்தித் துரத்தி ஹெலி ஒன்று கலிபர் தாக்குதலை நடத்தியது. ஆயினும் சாரதியின் சாதுரியத்தால் எது வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இருபது நாட்களின்பின் விடுதலையானார்

(குருநகர்)

சிறிலங்கா கடற்படை கைது செய்து கொண்டு சென்ற இளைஞர் இருபது நாட்களுக்குப் பிற்பாடு நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

சம்பவம் பற்றித்தெரியவருவதாவது;

யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை ஞானசேகரன் கடந்த அக்டோபர் மாதம் கடலில் வைத்து கடற்படையால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டார்.

இருபது நாட்களின் பின்பு பாலைதீவுக்கு அண்மையில் மீன்பிடித் தொழிலில் கடந்த செவ்வாய்காலை ஈடுபட்டிருந்தவர்களிடம் ஞானசேகரன் விடுவிக்கப்பட்டார். (21)

## சம்பளம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு திணைக்களங்களின் ஊழியர், உத்தியோகஸ்தர் சம்பள விகிதம் குறித்து ஒரு கலந்துரையாடல் செய்வதற்காக யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்கள தலைவர்களையும் யாழ். அரச அதிபர் நாளை வெள்ளிக்கிழமை 23ஆம் திகதி யாழ். செயலகத்திற்கு அழைத்துள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 19 - 10 - 1935



உதிர்வு 23 - 10 - 1990

### திரு. கந்தர் நாகலிங்கம்

(அரசாங்க நிலஅளவை கங்காணி, யாழ்ப்பாணம்)

அன்னாரின் அந்தியேட்டியும் வீட்டுக் கிரியையும் (22-11-1990) கார்த்திகை 6ஆம் திகதி இன்று வியாழக்கிழமை நயினை தீர்த்தக்கரையில் நடைபெறவிருப்பதால் அதில் உற்றார், உறவினர், சிநேகிதர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு மிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.

1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
மகன்: நா. ரவீந்திரன்

(R/832)



# தமிழீழ மாவீரர் வாரம்

**21-11-1990 ✲ 27-11-1990**

தமிழீழ மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் போராடி வீரமரணத்தைத் தழுவி சரித்திரமாகிவிட்ட

**மாவீரர் அனைவரையும் நினைவு கூர்ந்து**

அன்னவரின்

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர்களின் இலட்சியக் கனவை நனவாக்க தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும் உறுதிபூணுவோமாக.

மீசாலை தெற்கு

--சிற்றூரவை,



விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

மீசாலை தெற்கு.

(B. 1614)

**சிந்தனைக்கு**

*அவதானமும் விழிப்பும் ஒன்றியிருந்தால் ஏமாற்றுபவர் உலகில் இல்லை!*

— ஜோர்ஜ் பேனாட்ஷா


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 22-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகம்: 2208
த.பெ.எண் 05


## எதிரிகள் உள்ளனர்; விழிப்பு தேவை

தமிழீழத்திற்காக தமது உயிர் கொடுத்த மாவீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள் தமிழீழப் பிரதேசம் எங்கும் திட்டமிட்டபடி நேற்றுக்காலை ஆரம்பமாகின. அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இந்த நிகழ்ச்சிகள் விமரிசையாகத் தொடங்கின.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் திட்டமிட்டபடி தமிழீழத் தேசியக்கொடி ஏற்றும் நிகழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சிகள் தொடங்கின. அரச தனியார் நிறுவனங்கள் உட்பட பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் யாவற்றிலும் இந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

தேசியக் கொடி ஏற்றலைத் தொடர்ந்து வீர மரணமடைந்த மாவீரர் நினைவாக உருவப்பட திரை நீக்கங்கள், போராளிகள் பெயரில் வீதித் திறப்பு என்பனவும் இடம்பெற்றன. அதேவேளை பாடசாலைகளிலும், நிறுவனங்களிலும் நடைபெற்ற மாவீரர் நாள் கூட்டங்களில் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறாக மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப் பட்ட வேளையில் இந்த நிகழ்ச்சியைக் குழப்பி அடிக்கவும், மக்களைக் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கையிலும் சிறிலங்கா விமானப்படையினர் குண்டு வீச்சுக்களையும், பரவலாக துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

இந்த எழுச்சி நாள் விழாவைக் குழப்புவதில் சிறிலங்கா அரசாங்கமும் திட்டமிட்டே செயற்பட்டது. இதனால் தனது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கு ஒரு நாள் முன்னதாகவே ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்தியதோடு அன்றே விமானப்படையைக்கொண்டு தாக்குதலையும் மேற்கொண்டது. இந்த மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை குழப்புவதற்காகவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பதை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களே ஒத்துக்கொண்டுள்ளன.

ஆனால், ஊரடங்கும் விமானக் குண்டுவீச்சும் ஹெலிகொப்டர் தாக்குதலும் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்ச்சிகளைத் தடை செய்ததாக இல்லை. மக்கள் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதிலோ, அன்றி அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதிலோ பின்னடையவில்லை. தமது முழுப் பங்களிப்பையும் அவர்கள் நல்கியே இருந்தனர்.

மிரட்டலுக்குப் பணியாதமக்களின் இந்தஎழுச்சியானது தமிழீழத்தின்மீது தமிழ்மக்களுக்குள்ள நம்பிக்கையையும் அதைவழிநடத்தும்தலைமையின்மீதுள்ளநம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

அத்தோடு, மக்களின் எழுச்சி எந்த விதமான அச்சுறுத்தலாலும் கட்டுப்படுத்தமுடியாதது என்பதையும் இந்நிகழ்ச்சியின் ஆரம்பம் காட்டியது.

அதேவேளை, தமிழீழ மக்கள் இன்னமும் தீவிர கவனத்துடனும், அவதானத்துடனும் இருக்கவேண்டும் என்பதையும் நன்கு உணர வேண்டும். ஏனெனில் அண்மைக்கால விமானக் குண்டுவீச்சுகள் ஆக்கிரமிப்பாளர் களின் கைக்கூலிகள் இன்னும் எங்கள்மண்ணில்உள்ளனர் என்பதை உணர்த்துபவையாக உள்ளன.

எடுத்துக்காட்டாக, நேற்று முன்தினம் உரும்பராயில் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சைக் கொள்ளலாம். நேற்று முன்தினம் உரும்பராயில் ஒலிபரப்பு நாடா வெளியீட்டு விழா ஒன்று நடைபெற இருந்ததை குழப்பி அடிக்கும்நோக்கத்திலேயே இக்குண்டு வீச்சு இடம் பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு பற்ற இருந்த இந்த நிகழ்ச்சிபற்றிய தெளிவான தகவல் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களுக்குக் கிடைத்திருக் கின்றது. முதலில் வீசப்பட்ட குண்டினால் நிகழ்ச்சி நடைபெறவிருந்த இலக்குத் தாக்கப்படாமையினால் மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதாவது தாக்குதல் இலக்குத் தவறிவிட்டது என்பதை மீண்டும், மீண்டும் சிறிலங்கா விமானப் படையினருக்கு எமது மண்ணில் உள்ள கைக்கூலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது எமது மண்ணில் நடப்பவற்றை அறிவதில் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மிக அவதானமாக இருப்பதோடு அவற்றைப் பெற்றும் வருகின்றார்கள் என்பதையே இது காட்டுகின்றது.

இந்த நிலையில், மாவீரர் நிகழ்ச்சிகளையும், ஏனைய பொது நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்யும் அமைப்பாளர்களும், மக்களும் கைக்கூலிகள் தொடர்பாக விழிப்பாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இது மக்களின்பாதுகாப்புடன் தொடர்புடையதாக இருப்பதினால் ஆகும்.

### ஆரையம்பதி முகாமில் இருந்து

# ரோந்துசென்ற இராணுவம்மீது புலிகள் கிளைமர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

ஆரையம்பதிஇராணுவமுகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்கியதுடன் இந்த தாக்குதலில் காயமடைந்தவரை மீட்கவந்த இராணுவத்தினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆரையம்பதி இராணுவ முகாமிலிருந்து கடந்த திங்கள் காலை பத்துமணியளவில் ஒரு இராணுவ பிரிவு மண்முனைத்துறை எனும் கிராமத்தை நோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினரை கிளைமர் கொண்டு விடுதலைப்புலிகள் தாக்கியதில் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் கிடந்தனர். இதேவேளை ஏனைய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது இந்தச் சண்டையிலும் பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இவ்வாறு காயமடைந்த இராணுவத்தினரை மீட்பதற்கென அதே ஆரயம்பதி முகாமிலிருந்து மேலும் இராணுவ அணி புறப்பட்டு வந்தபோது அவர்கள் மீதும் ஒல்லிக்குளம் பகுதியில் வைத்து கிளைமர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதிலும் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து இராணுவத்தினர் கண்மூடித்தனமாக பொது மக்களின் பகுதிகள் மீது கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பொது மக்களின் சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

மண்முனை துறைப்பகுதிக்கு ஏற்கனவே இராணுவம் போக்குவரத்தை தடைசெய்திருந்ததுடன் அந்த கிராமத்தை அண்டிய ஆற்றில் மீன்பிடிக்க தமிழ் மக்களுக்கு தடைவிதித்திருந்ததும், இதனால் நூற்றுக்கணக்கான தமிழ் குடிமக்கள் பட்டினியால் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

**மாவீரர். . .**

றோம். எமது இனத்தின் வரலாற்றில் இந்த மாவீரர் நாள் ஒரு பிரதானமான நாள். . . மகத்தான நாள்.

நெஞ்சில் விடுதலை நெருப்பையும், உணர்வில் சுதந்திர தாகத்தையும் சுமந்து, எமது மக்களுக்காக மடிந்த இம் மண்ணின் மைந்தர்களை தமிழீழம் கௌரவிக்கின்ற நாள்.

உயிர்களில் உன்னதமான அந்த உயிர்களை மனிதர்களின் உயர்ந்த அந்த மாவீரர்களை, நாங்கள் பெருமதிப்புடன் வணக்கம் செய்கின்ற நாள்.

எங்கள் மண்ணின் மூலை முடுக்குகள் எங்கும் எழுந்து நிற்கின்ற இந்த மாவீரர்களின் கல்லறைகளுக்கு முன் நின்று அவர்களின் கனவுகளே எங்கள் நினைவுகளாய் அவர்களின் சுவடுகளே எங்கள் பாதைகளாய்க் கொண்டு பயணத்தைத் தொடர்வோம். என உறுதி யெடுத்துக்கொள்கின்றோம்.

எமது மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது 18 வயதையும் கடந்து வெற்றிகளைப் பெற்றபடி வளர்ந்து வருகிறது.

இப்போராட்ட வெற்றியென்பது எண்ணிக்கையில், ஒன்று பத்தாகி பத்து நூறாகி நூறு ஆயிரமாகி பல்லாயிரமாகிப் பெருகியதையா அர்த்தப்படுத்துகின்றது.

அல்லது சிறிய கைத் துப்பாக்கியுடன் தொடங்கி இன்று பலம் பொருந்திய ஆயுதங்களைக் கொண்ட இயக்கமாக மாறியதையா அர்த்தப்படுத்துகின்றது;

அல்லது சிறிய குழுவாக எமது மண்ணிலேயே மறைந்திருந்த நாம் இன்று முழு உலகமே வியக்கும் வண்ணம் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக உருவாகியதையா அர்த்தப்படுத்துகின்றது! இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது மண்ணை மீட்க, தர்மத்தை நிலைநாட்ட, கௌரவத்துடன் வாழ, எவ்வளவு மக்கள் முன்வருகின்றார்கள்; எவ்வளவு மக்கள் தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதே போராட்ட வளர்ச்சியைச் சுட்டிக் காட்டும்.

அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓரளவு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

எமது மக்கள் தமிழீழத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் நாம் எல்லோரும் உடன் பிறப்புக்கள், ஒரே குடும்பத்தவர்கள் என்ற உணர்வுடனேயே வாழ வேண்டும்.

கஷ்டங்கள், துன்பங்கள் யாருக்கும் வந்தாலும் எப்பகுதியில் நிகழ்ந்தாலும் நாம் ஒவ்வொருவரும் எமக்கு நேர்ந்ததாகக் கருதி ஒருவருக்கொருவர் உதவியாக ஆறுதல் கூறியே வாழவேண்டும்.

இன்று எமது மக்கள் முன் எப்பொழுதும் இல்லாதவாறு, சிறிலங்கா வெறி அரசினால் கொடுமைகளையும் அழிப்புக்களையும் அனுபவித்து வருகின்றனர்.

வடக்கே யாழ்ப்பாணம் முதற்கொண்டு தென் தமிழீழமான திருக்கோணமலை,மட்டக்களப்பு, அம்பாறை வரையிலும் இக் கொடுமைகளையும் துன்பங்களையும் எமது மக்கள் தாங்குகின்றார்கள்.

ஆனால் புவியியல் காரணங்களினாலும், அரசியற் காரணங்களினாலும் தென் தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த மக்கள் அனைவருமே அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர். அவர்களது சொந்த வசிப்பிடங்களிலிருந்து, விவசாய நிலங்களிலிருந்து, கடற்கரைகளிலிருந்து, காடுகளிலிருந்து வெளி இடங்களுக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

வழி நெடுகிலும் இவர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கானோர் அகதிமுகாம் என்ற பெயரில் பணயமாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட்டார்கள்.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பல பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

கடந்த 5 மாதக் கொடுமைகளால் அங்கே குடும்பங்கள் சிதைந்துள்ளன. கணவனுக்கு மனைவியின் நிலையோ, பெற்றோருக்குப் பிள்ளைகளின் நிலையோ தெரியாது. அகதிகளாக விரட்டப்பட்ட தமிழர்கள் நாளாந்தம் நோயாலும் பட்டினியாலும் அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக விடுதலைக்கு அதிகவிலை செலுத்திக் கொண்டிருக்கும் தென் தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறைப் பகுதிமக்கள் விடுதலைப் போராட்டத்தை அதிகளவில் நேசிக்கிறார்கள்.

இயலுமானவரை நாம் ஒவ்வொருவரும் இந்த மக்களின் துயரைப்பகிர்ந்துகொள்வதும் எந்த இலட்சிய தாகத்தை நெஞ்சில் இருத்தி களம்புகுந்து வீர மரணமடைந்தார்களோ, அந்த இலட்சியத்தை உறுதியுடனும், நம்பிக்கையுடனும் செயற்படுத்தி இறுதிவெற்றியைக் காண நாம் அனைவரும் ஒரே குடையின் கீழ் அணி திரள்வதுதான் எமது மாவீரர்களுக்கு நாம் செய்கின்ற அஞ்சலியாகும்.

மாவீரர்கள் இவர்கள் அதர்மத்தைக் கண்டு வெகுண்டெழுந்தவர்கள். தர்மத்தைக் காக்கப் போராடியவர்கள். மானிட முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள பிற்போக்குச் சிந்தனைகள்; பிற்போக்கு நடைமுறைகள் போன்ற தடைகளைத் தாண்டிச் செல்பவர்கள்.

மனித வாழ்வை மேம்படுத்தும் புதிய சிந்தனைகளையும், புதிய பாதைகளையும் உருவாக்குபவர்கள்: உருவாக்கக் காரணமாக இருப்பவர்கள். இவற்றைச் சாதிப்பதற்காக தன்து நலன், தனது குடும்பம், தனது விருப்பம் என்பன போன்ற குறுகிய எல்லைக்குள்ளிருந்து தம்மை விடுவித்துக் கொண்டவர்கள்.

எமது நாடு, எமது மக்கள், எமது நலன் என்று தனது சிந்தனையினதும், கடமையினதும் எல்லைகளை விரிவாக்கிச் செயற்பட்டவர்கள்.

வரலாற்றில் எத்தனையோ புரட்சி வீரர்களையும், சிந்தனையாளர்களையும் நாம் படித்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்; போற்றியிருக்கிறோம்.

ஆனால் இன்று நாம் வாழும் காலத்திலேயே எமது கண்ணின் முன்னாலேயே உன்னதமான வரலாறு ஒன்று படைக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

எம்முடனேயே வாழ்ந்தவர்கள், எம்முடனேயே உண்டு உறங்கியவர்கள். தங்களது இரத்தத்தால் எழுதும் உன்னத வரலாற்றைப் பார்க்கிறோம்.

எமது தோழர்களை, எமது உடன் பிறப்புக்களை, நமது குழந்தைகளை நாயகர்களாகக் கொண்ட வரலாற்றை நாம் காண்கிறோம்.

இன்றைய நாளில் இத்தகைய தன்னலம் மறந்த தீரர்களை, கடமை வீரர்களை, தாய் மண்ணின் விலங்கொடிக்க, எமது சுதந்திரக் கொடி பறக்க களத்தில் போராடி, வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவை நெஞ்சில் நிறுத்தி இதய பூர்வமாக அவர்களுக்கு அஞ்சலி செய்கிறோம்...... நிமிர்ந்து நிற்கிறோம்.

தொடர்ந்தும் ஆயிரம் ஆயிரம் எம்மக்கள் இம்மாவீரர்களின் இலட்சியச் சுடரை தம் நெஞ்சில் ஏற்றி உலா வருகின்றார்கள்.

இம் மாவீரர்களின் பாதையில் அணிவகுக்கின்றார்கள்.

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

''உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்'' கட்டுரைத் தொடர் நாளை வெளிவரும்.

## தமிழின விடிவிற்காய் உயிரை அர்ப்பணித்த
# மாவீரரை நினைவு கூர்வதும்
# கௌரவிப்பதும் நமது 'கடமையாகும்

**- துணைவேந்தர் துரைராசா**

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் விடிவிற்காக தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவு கூருவதோடு அவர்களைக் கௌரவிக்கவேண்டியது நமது ஒவ்வொருவரினதும் கடமையாகும், இதற்கு தமிழினத்திற்கென்று ஒரு நினைவு நாளை மாவீரர் நாளாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

இவ்வாறு நேற்றுக்காலை மாவீரர் வார ஆரம்பநாள் வைபவத்தில் யாழ் பல்கலைக் கழகத்தில் தேசியக்கொடி யேற்றிவைத்து உரையாற்றிய துணைவேந்தர் திரு. அ. துரைராசா அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எமது தமிழினம் காலங்காலமாகப் பல இடர்பாடுகளை அனுபவித்து வருகிறது. இதில் இருந்து விடுதலைபெற எமது இளைஞர்கள் தமது உயிர்களைத் துச்சமாக மதித்துப் போராடி வருகிறார்கள். இதற்கு நாமும் எங்களாலியன்ற பங்களிப்பைச் செலுத்தவேண்டியது தமிழர்களாகிய எம் கடமையாகும்.

எமது துன்பங்களில் இருந்து நாம் விடுபடும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இந்த நாளில் நாம் கூட மாவீரர்களாக மரணித்துவிடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை ஆனால் ஒன்றுமட்டும் உறுதி எமது இனத்தின் விடிவை விரைவில் நாம் சந்திப்போம் இதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பங்காற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் கணேசலிங்கம் வீரர்கள் சாவதில்லை அவர்கள் என்றும் நெஞ்சில் குடிகொள்பவர்கள். எம்மை அடக்கிஆள முனையும் படைகளுடன் எதிர்த்துப் போராடி வீரமரணமடைந்த இந்த மாவீரர்கள் போற்றப்படவேண்டியவர்கள் இதற்கு மாவீரர் நாளில் இவர்களை நினைவு கூர்வது சாலவும் பொருத்தமானது. எமது விடுதலைக்காக மரணித்த மாவீரர்களின் தியாகங்கள் எமது மனதில் ஏற்றிவைக்கப் படவேண்டும். மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப் படவேண்டியவர்களே இதன் மூலம் மேலும் பல வீரப்பெற்றோர்களை உருவாக்கமுடியும் எனத் தெரிவித்தார். (மு)

யாழ். குடா

பொதுமக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றியதை அவதானிக்க முடிந்தது.

**கொடி ஏற்றுதல்**

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு தமிழீழமெங்கும் தேசியக்கொடி ஏற்றுவதுடன் இந்தக் கொண்டாட்டங்கள் ஆரம்பித்தன. யாழ். அரச அதிபர் அலுவலகம், யாழ். பல்கலைக்கழகம் உட்பட அனைத்து உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் யாழ். குடா நாட்டில் உள்ள அத்தனை பாடசாலைகளிலும் காலை ஒன்பது மணிக்கு இந்த தேசியக்கொடி ஏற்று வைபவம் நிகழ்ந்தது. இந்த கொடிகளை துணைவேந்தர், பாடசாலை அதிபர்கள், போராளிகளின் பெற்றோர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

**உறுதியின் உறைவிடம்**

எதிர் காலத்தின் சந்ததிகளான இரண்டு சிறுவர்களை தோளில் துப்பாக்கி ஏந்திய ஒரு போராளி அழைத்துக் கொண்டு வீர மரணமடைந்த போராளிகள் சமாதி நோக்கிச்செல்வதை சித்தரிக்கும் சித்திரம் ஒவ்வொரு நினைவு சிகரங்கள் மீதும் பந்தல்களிலும் வரையப்பட்டிருந்தன.

**ஏனைய பிரதேசங்கள்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட மன்னார், வவுனியா ஆகிய கிராமப்பகுதிகளிலும் கூட நேற்று மாவீரர்தின லங்காரங்கள் ஆரம்பித்திருப்பதாக எமக்கு நேற்றுமாலை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

**ஊரடங்கு தவிடுபொடி**

நேற்று முன் தினம் முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு. யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாக அரசு அறிவித்திருந்தது. விமானப் படை விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் அரசின் ஊரடங்கு உத்தரவை அமுலாக்கும் வகையில் பல இடங்களிலும் தாக்குதல்களை மேற்கொண்டன. ஆனால் இவை அனைத்தையும் மீறிப் பொதுமக்கள் மாவீரர்நாள் நிகழ்ச்சியில் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் பங்குபற்றியதை எங்கும் அவதானிக்கமுடிந்தது. அரசாங்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகளெதுவும் மாவீரர்நாள் ஏற்பாடுகளைக் குழப்பியதாகவோ முறியடித்ததாகவோ அறியவரவில்லை. சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் நேற்று முன்தினம் குண்டு வீசப்பட்ட இடத்தில் வீதியை மேவும் நினைவுச்சிகரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புத்தூரில் ஷெல் வீச்சுக்கு ஒருவர் பலி; நால்வர் காயம்

(அச்சுவேலி)

ஷெல் தாக்குதலால் புத்தூர் மேற்கு இந்திட்டியில் ஒருவர் பலியானார். நால்வர் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுப்பலியானவர் வசாவிளானின் குட்டியபுலத்தில் இருந்து அகதியாக இடம் பெயர்ந்து புத்தூரில் வசித்து வரும் செல்லர் தவராசா (வயது 28) என்பவராகும்.

தவம் செல்வராணி (வயது 38), குட்டியபுலம், சின்னையா மகாலிங்கம் (வயது 38) குட்டியபுலம், கிருஷ்ணன் இராசன் (வயது 25) குரும்பசிட்டி, சுந்தரமூர்த்தி ஸ்ரீபன் (வயது 8) குரும்பசிட்டி ஆகியோர் படுகாயம் அடைந்தனர்

**திருநெல்வேலி, நாயன்மார்கட்டு**

## நேற்றைய குண்டுவீச்சால் ஒருவர்காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, நாயன்மார் கட்டு ஆகிய இடங்களில் நேற்றுக்காலை 8 15 மணியளவில் சிறிலங்கா விமானடபடை குண்டுவீச்சு விமானங்கள் குடியிருப்புகளை நோக்கிப் பல தடவை தாக்குதல்களை நடாத்தியதில் ஒருவர் காயமடைந்தார், சில வீடுகள் சேதமடைந்தன.

நாயன்மார்கட்டுப்பகுதியில் பலமுறை வட்டமிட்ட குண்டு வீச்சுவிமானங்கள் இருதடவைகள் குண்டுகளை வீசின. இத்தாக்குதலில் ஓய்வுபெற்ற கச்சேரி அதிகாரியான திரு. கைலாசபதி (வயது 60) என்பவர் பலத்தகாயமடைந்தார். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் இரண்டு தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன. இப்பகுதியில் இருந்த மூன்று வீடுகள் சேதமடைந்தன. இத்தாக்குதலின் போது இப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்து இருந்ததினால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (85)

## குடாநாட்டில் பரவலாகக் ஹெலி தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று சிறிலங்கா ஹெலிக்கொப்டர்கள் பரவலாக கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டதில் பலர் காயமடைந்தனர்,

தெல்லிப்பளை, சுன்னாகம், மல்லாகம் ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை நடாத்தப்பட்ட தாக்குதலில் த.புவனசிங்கம் (வயது 20), வீமன்காமத்தைச்சேர்ந்த க. வேலுப்பிள்ளை ஆகியோர் பலத்த காயமடைந்தனர்.

தென்மராட்சிப் பகுதியில் புத்தூர்ச்சத்தி, வேம்பிராய் ஆகிய பகுதிகளிலும் தாக்குதல் நடாத்தப்பட்ட போதிலும் எவரும் காயமடையவில்லை.

திருநெல்வேலிப் பகுதியைப் பலமுறை வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் பலத்த தாக்குதலைமேற்கொண்டது. இதில் வீட்டுமுற்றத்தில் நின்ற நாகம்மா (வயது 50) பலத்த காயமடைந்தார். (க)

**பல முனையில்**

றாக அழிந்தது. இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

தொடர்ச்சியாக பல மணி நேரம்நடைபெற்ற இம்மோதலின் பின் முன்னேறும் முயற்சி தோல்வியடைய இராணுவம் இழப்புகளுடன் முகாம் திரும்பியது.

**ஒத்துழைக்கவும்**

பெயர் போன்ற குறிப்புகளில் மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலோ, அல்லது மாவீரர் ளின் பெயர்கள் விடுபட்டிருந்தாலோ தங்கள் பகுதிப் பிரதேசப் பொறுப்பாளரிடமோ, அல்லது ஈழநாதம் அலுவலகத்திற்கோ அவற்றைத் தெரியப்படுத்தவும்.

விரைவில் முழுமையான பட்டியல் ஒன்றைத் தயாரிக்க அனைவரும் ஒத்துழைக்கவும்

## சந்திரசேகர் புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்பு

(டில்லி)

இந்தியாவின் புதிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனால் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.

எஸ். சந்திரசேகர் பிரதமராகப் பதவியேற்றுப் பதினொரு நாட்களின் பின்னர் அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. 13 மந்திரி சபை அமைச்சர்களும், 3 தனிப் பொறுப்புள்ள இணையமைச்சர்களும், 12இணையமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ராஷ்ரபதி பவனில் 45 நிமிடங்கள் இது தொடர்பான வைபவம் நடைபெற்றது. பிரதமர் சந்திரசேகர் உள் நாட்டலுவல்கள், பாதுகாப்பு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். துணைப் பிரதமர் தேவிலால் வேளாண்மை, உல்லாசப் பிரயாண அமைச்சராகவும், பிரபல அரசியல்வாதியான சுக்ளா வெளியுறவு அமைச்சராகவும் பதவி ஏற்றார்கள். ஜனதா தளம் (எஸ்) கட்சியைச் சேராத சுப்பிரமணிய சுவாமி வர்த்தக அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். ஜனதா தளம் (எஸ்) கட்சியைச்சாராமல் வெளியிலிருந்து நியமனம் பெற்ற ஒரேயொரு அமைச்சர் இவராவார்.

அமைச்சரவை விபரங்கள் அறிவிப்பைத் தொடர்ந்து, சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பிரதமர் சந்திரசேகர் மாலேக்குப் பிரயாணத்தைமேற்கொண்டார். பிரதமர் பதவியை ஏற்றபின் சந்திரசேகர் கலந்து கொள்ளும் முதல் சர்வதேச மகாநாடு இதுவாகும். இவருடன் புதிய வெளிநாட்டு அமைச்சரும் சென்றுள்ளார்.

வீதி அலங்காரங்களில் ஈடுபட்டோரை

## வவுனியாவில் கலைக்கமுற்பட்ட இராணுவம் - புலிகள் மோதல்

(வவுனியா)

நேற்று வவுனியா - மன்னார் வீதியிலுள்ள பட்டானிச்சூர் என்னுமிடத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிக் கொடியை ஏற்றி வீதி அலங்கார வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. அப்போது காமினி மகாவித்தியாலய முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். பின்னர் முகாமிலிருந்து 'பவல்' வாகனம் மூலம் புறப்பட்டு அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதேவேளை யாழ்ப்பாணம் வவுனியா வீதியிலுள்ள தாண்டிக்குளம் சந்தியிலும் வீதி அலங்கார வேலைகளை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் மீது காமினி மகா வித்தியாலய முகாமிலிருந்து இரண்டு 'பவல்' கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமிற்குத்திரும்பினர்.

## தமிழர் வீட்டில் இருந்து சிங்களவர் அடையாளஅட்டை

(வவுனியா)

வவுனியா கரப்பன்காடு பகுதியில் தமிழர் ஒருவரின் வீட்டிற்குள் இருந்து சிங்களவர் ஒருவரின் அடையாள அட்டை எடுக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் வவுனியாவில் இராணுவ நடவடிக்கையை அடுத்து கரப்பன்காடு பகுதியில் குடியிருந்த அனைத்துத் தமிழ்க் குடும்பங்களும் இடம்பெயர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிராமப் பகுதிகளில் வந்து தஞ்சமடைந்தனர்.

சில தினங்களுக்குமுன் இராணுவ அதிகாரியின் அனுமதி பெற்று தமது வீட்டைப்பார்க்கச்சென்றவர் வீட்டில் சிங்களவர் ஒருவரின் அடையாள அட்டையை மீட்டெடுத்துக் கொண்டுவந்துள்ளார்.

தமிழரின் வீட்டில் சூறையாடச் சென்றவர் தனது அடையாள அட்டையை தவறவிட்டு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (தி)

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளைநடேசபிள்ளை

(உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ். கச்சேரி)

திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை 20-11-90 அன்று காலமானார். இவர் கலாறஞ்சினியின் அன்புக் கணவரும், கௌசல்யா, கார்த்திகாயினி, நளாயினி, விஷ்ணு, கோபிகா ஆகியோரின் தந்தையும், அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தங்கம்மா ஆகியோரின் மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா மாஸ்டர், மகேஸ்வரியின் அன்பு மருமகனும், சுவாமிநாதன், நவரெத்தினம், அருளானந்தம், சுப்பிரமணியம், ஐயப்பெருமாள் (இலங்கை வங்கி முகாமையாளர், அநுராதபுரம்), விமலாதேவி, பரமேஸ்வரி, சாரதா, குமணன் ஆகியோரின் சகோதரரும், பத்மநாதன், இரகுநாதன் (புகையிரதத்திணைக்களம் கொழும்பு), சண்முகநாதன் (மேலதிக அரசாங்க அதிபர் கச்சேரி யாழ்ப்பாணம்), சபாநாதன், ஜெகநாதன், கமலநாதன், யோகநாதன், இரவீந்திரநாதன், சிதம்பரநாதன், வள்ளியம்மை, சபாரெத்தினம், விமலராணி, செல்லம்மா, தனலெட்சுமி, பாலச்சந்திரன், குமாரசாமி, குணரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும், நல்லம்மா, கமலாம்பாள், சுபத்திராதேவி, லலி, அனுஷா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரருமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (22-11-90) மாலை 2 மணிக்கு 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும், இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. சண்முகநாதன்
(மைத்துனர்)

(B/1618)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது